அசல் வழக்கு எண்.174/2020 வா.சா.1 தினேஷ் த/பெ செல்வம்

**13.03.2024 குறுக்கு விசாரணை தொடர்ச்சி....**

8. என் அம்மா பெயர் ஜெயா. என் அம்மா, அப்பா தற்போது சித்தேரியில் உள்ளார்கள். 2011ம் ஆண்டு என் அப்பா, அம்மா வேறு எங்காவது குடியிருந்தார்களா என்றால் இல்லை. சென்னை திருவெற்றியூரில் 2011ம் ஆண்டு என் அப்பா அம்மா குடியிருந்தார்கள் என்று சொன்னால் அப்போது நான் சிறிய வயது என்பதால் எனக்கு தெரியாது. என் தம்பி தங்கை சென்னையில் படித்தார்கள். நான் 6ம் வகுப்பிலிருந்து தான் சித்தேரியின் பக்கத்தில் விளை கிராமத்தில் படித்தேன். நான் 5ம் வகுப்பு வரை எங்கு படித்தேன் என்றால் சென்னையில் படித்திருப்பேன் எனக்கு அப்போது விவரம் தெரியாது.

9. என் அம்மா பெயர் ஜெயலட்சுமி என்றால் இல்லை. வீட்டில் ஜெயா என்று தான் அழைப்பார்கள். அவரது பெயர் ஜெயலட்சுமி இல்லை. என் அப்பா அம்மா தம்பி தங்கை ஆகியோருடன் சேர்ந்திருந்த குடும்ப அட்டை நகல் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்அம்மா பெயர் ஜெயாதான் என்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்பட வில்லை என்றால் சரிதான். என்தம்பி பள்ளி மதிப்பெண் பட்டியலில் என் அம்மா பெயர் ஜெயா என்று தான் இருக்கும். ஆதார் கார்ட்டிலும் ஜெயா என்று தான் இருக்கும்.

10. என் அம்மா அப்பா என் அப்பாவின் சட்டப்பூர்வமான மனைவி என்பதற்கான திருமண பத்திரிக்கை அல்லது வேறு ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை அவர்கள் திருமணம் என் அத்தை மூலமாக ஒரு கோவிலில் நடந்தது அதனால் திருமணத்திற்கான ஆவணம் எதுவும் இல்லை.

11. இந்த வழக்கில் பிரதிவாதி யோகானந்தம் தாக்கல் செய்த பதிலுரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் அம்மா ஜெயலட்சுமி க/பெ செல்வம் என்று குறிப்பிட்டு 03.03.2011 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்றை யோகானந்தத்திற்கு அனுப்ப இருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு என் அம்மா வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியது பற்றி அதற்கு பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்பது பற்றியோ என் அம்மா என்னிடம் ஏதாவது சொல்லிகேள்விப்பட்டேனா என்றால் கேள்விப்பட்டேன். வழக்கறிஞர் அறிவிபபு அனுப்பி பதில் அறிவிப்பு அனுப்பப்படவில்லை என்று கேள்விப் பட்டேன்.

12. பிரதிவாதி யோகானந்தம் மற்றும் அவரது மனைவி இந்த வழக்கில் தாக்கல்செய்துள்ள பதிலுரையில் என் அம்மா என் அப்பாவின் சட்டப் பூர்வமானமனைவி அல்ல என்று சொரிலி உள்ளர்கள் என்றால் சரியல்ல என் அம்மாதான் என் அப்பாவின் சட்டப்பூர்வமான மனைவி ஆவார். அதேபோல் நானும் என் தம்பியும் செல்வத்தின் சட்டப்பூர்வமான வாரிசுகள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் சட்டப்பூர்வமான வாரிசுகள் தான்.

13. பலராமன் முதலியாருக்கு வழக்கில் கண்டுள்ள சொத்து மட்டும்தான் பாத்தியமா அல்லது இதர சொத்துக்கள் ஏதும் அவருக்கு உள்ளதா என்றால் வழக்கு சொத்து தவிர்த்து வேறு சொத்துக்களும் உள்ளது ஆனால் உயில் வழக்கு சொத்து சம்மந்தமாக மட்டும்தான் எழுதி வைக்கப்பபட்டது.

14. வழக்கு சொத்து தவிர்த்து வேறு சொத்துக்களை பலராம முதலியர் என்ன செய்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் அந்த சொத்துக்களை என் அப்பா தான் தற்போது அனுபவித்து வருகிறார் அந்த சொத்தில் தான் என் அப்பா குடியிருந்து வருகிறார். அந்த சொத்தின் அளவு தெரியுமா என்றால் தெரியாது. அது எத்தனை ஏக்கர் என்றால் தெரியாது. ஏக்கர்

கணக்கு வராது செண்ட் கணக்கில் தான் அந்த சொத்து வரும்.

நீதிமன்ற கேள்வி - எத்தனை செண்ட் என்றால் அது எனக்கு தெரியாது.

15. பலராம முதலியார் தனக்கு சொந்தமான இதர பல சொத்துக்களை 3ம் நபர்கள் யாருக்காவது கிரயம் கொடுத்துள்ளாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பலராம முதலியார் உயில் எழுதி வைத்த சொத்தை தவிர்த்து அவருக்கு சொந்தமான இதர சொத்துக்கள் குறித்த விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. சித்தேரியில் உள்ள சொத்தில் என் அப்பா குடியிருந்து வருகிறார் அது மட்டும் தெரியும்.

16. நான் இதற்கு முன்பு சாட்சியம் அளித்தபோது யோகானந்தம் என்பவருக்கு என் அம்மா வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றும் ஆனால் அதற்கு பதில்அறிவிப்பு எதுவும் அனுப்பப்படவில்லை என்றும் கேள்விப்பட்டதாக சொல்லி உள்ளேன் என்றும் இந்த விவரங்களை தாவாவில் குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் எனக்கு நினைவில்லை.

17. பி.லட்சுமி என்பவர் யார் என்றால் என் பாட்டி ஆவார். அவர் பலராம முதலியாரின் மனைவி ஆவார். 13.10.2003ல் தட்சிணாமூர்த்தி என்பவருக்கு பலராம முதலியாரும் அவரது மனைவி லட்சமி அம்மாளும் அவரது மகன் செல்வமும் சேர்ந்து ஒரு கிரய ஒப்பந்தம் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் அது நான் 2002ல் பிறந்தேன். அதனால் எனக்கு விவரம் தெரியாத வயதில் எழுதி வைக்கப்பட்ட ஆவணம் ஆகும்.

18 தாவாச் சொத்தை செல்வம் 1ம் பிரதிவாதிக்கு எந்த வருடம் கிரயம் கொடுத்தார் என்றால் 2002 அல்லது 2003 இருக்கும் வருடம்சரியாக நினைவில்லை. 16.05.2005 அன்றுதான் யோகானந்தத்திற்கு கிரயம் என்அப்பா கொடுத்தார் என்றால் சரிதான். அந்தகிரயம் கொடுத்ததற்கான காரணம் குடும்ப செலவிற்காகவும், எங்களை வளர்ப்பதற்காகவும் தான்என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. குடும்ப செலவிற்காகவும் எங்கள் பராமரிப்புக்காகவும் என் அப்பா எந்தசெலவும் செய்யவில்லை குடித்தே தான் சொத்துக்களை அழித்தார்.

19. அவ்வாறு என் அப்பா கிரயம் கொடுத்து பெற்ற தொகையிலிருந்து தான் ஒரு பிளாட் வாங்கி உள்ளார் என்றும் ஒரு வீடு கட்டியுள்ளார் என்றும் சொன்னால் அதுதவறாகும் இது வரையில் அவ்வாறு அவர் செய்தது கிடையாது. எங்களுக்கோ என் அம்மாவிற்கோ அவர் எந்த செலவும் இதுவரையில் செய்தது இல்லை. மேலும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் எங்கள் பெயரில் நிரந்தரவைப்பீடு தொகை செலுத்தப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரிந்து அவ்வாறு எதுவும் என் அப்பா செய்யவில்லை. அவ்வாறு என் பெயரில் வங்கியில் நிரந்தர வைப்பீடு செய்யப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியும் என்றும் தெரிந்தும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

20. தாவாச் சொத்து மட்டும்தான் என் தாத்தா பலராம முதலியார் கிரயம் வாங்கிய சொத்து என்றும் அது தவிர்த்து அவருக்கு இருந்த இதர சொத்துக்கள் அவரது பூர்வீக சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. அவர் சம்பாதித்த சொத்துக்கள் தான். அவ்வாறு இதர சொத்துக்கள் பலராம முதலியார் கிரயம்வாங்கிய சொத்துக்கள் தான்என்று காட்டுவத்றகு ஆவணங்கள்ஏதும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. உயில் மட்டும் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

21. செல்வம் 1ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்தபோது அந்த சொத்து 3 போகம் விளையக் கூடிய நிலம் அல்ல என்றும் 1ம் பிரதிவாதி கிரயம் வாங்கிய பிறகுதான் நிலத்தை சமன்படுத்தி பண்படுத்தி அதன்பிறகு 3 போகம் விளையக்கூடிய நிலமாக மாற்றினார் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு முன்பு அந்த நிலத்தில் பயிர் வைக்கப்பட்டிருந்தது.

22. செல்வம் 1ம் பிரதிவாதிக்கு கிரயம்கொடுத்த சமயத்தில் அன்றைய தேதியில் இருந்த சந்தை மதிப்புக்குதான் கிரயம் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு கிரயம் கொடுத்த தேதியில் என் பெயரில் TTS0070742584 என்ற கணக்கில் நிரந்தர வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. அதேபோல் தொடக்க வேளாண்மை துவக்க வங்கியில் பெற்றிருந்த கடன் தொகை ரூ.36,764/- தொகையை செல்வம் செட்டில் செய்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது.

23. செல்வம் கிரயம் கொடுத்த காலத்தில் இருந்த சொத்தின் மதிப்பு தற்போது பல மடங்கு உயர்ந்து விட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதனால்தான் என்அ ப்பா அம்மா இருவரும் வழக்கு சொத்தை கைப்பபற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் 2011ம் ஆண்டுக்கு முன்னரே வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. அதனால் தான் நான் சட்டப்பூர்வமான வயதை அடையும் வரையில் காத்திருந்து அதன்பிறகு என் அப்பா அம்மா என்னை தூண்டிவிட்டு என் மூலமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. சிறு வயதிலிருந்தே என் அப்பா, அம்மா என்னை சரியாக பராமரிக்கவில்லை.

24.19.08.2005 தேதயிட்ட கிரய ஆவணம் தான் செல்வம் யோகானந்தத்திற்கு எழுதிக் கொடுத்த கிரய ஆவணம் என்றால் அதுப்றறி எனக்கு தெரியாது. அந்த கிரய ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள ரூ.1,75,000/-த்தை நான் திரும்ப செலுத்த சம்மதிக்கிறேன் என்ற சொல்லி உள்ளேனா என்றால் சொல்லிஉள்ளேன். ஆனால் ஆவணத்தில் என்ன தொகை உள்ளதோ அதை திரும்ப செலுத்த சம்மதிக்கிறேன் என்று சொல்லிஉள்ளேன். இந்த தகவலை என்அப்பா அம்மா சொல்லி தான்நான் தாவாவில் சொல்லி உள்ளேன்என்றால் சரியல்ல.

25. ஒரு இளவர் சட்டப்பூர்வமான பாதுகாவலர் என்றால் அது அப்பா, அம்மா தான் என்றால் சரிதான்.

( வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)